



Signature Not Verified
Signed by Assistant Director
Location:Madurai
Date:2025.02.20 18:0?:56

<u>மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - மதுரை மாவட்டம்</u>
<u>மதுரை உள்ளூர் திட்டக் குழுமம்</u>
<u>திருமங்கலம் ஊராட்சி</u>

மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், கரிசல்பட்டி கிராமம், சர்வே எண்கள்: 37/3A -இல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடம்.

(திட்டமில்லா பகுதி)

கோப்பு எண் : 40446/2025/SWP - 8ZVPOUB6
அளவு : 1 : 400

வ

**குறிப்புகள்:**

| | |
|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் மொத்த பரப்பளவு | = 71 செண்டு (2874.00ச.மீ) |
| மனைப்பிரிவு சாலைகள் மற்றும் மூலைமுடக்குகளின் பரப்பளவு | = 772.62 ச.மீ |
| மீதமுள்ள மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | = 2101.38 ச.மீ |
| மனைப்பிரிவு இடத்தின் எல்லை | = |
| நிலையிலுள்ள சாலை/அணுகு சாலை | = |
| கோரிய மனைகளின் எண்ணிக்கை | = 14 எண்ணம் |

**பொது ஒதுக்கீடு: (உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது)**

(அரசாணை எண்:18, ந.நி.(ம)கு.வ(ந.ப.1)துறை நாள்:04.02.2019, விதி-47(6)-ன்படியும் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்:4367/2019-பிஏ2, நாள்:05.02.2020, CASE-V-ன்படி பூங்கா பரப்பளவு- 211.00சமீ ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். மேற்கண்ட பூங்கா ஒதுக்கீடு பரப்பிற்கான வழிக்காட்டி மதிப்பீடு வழிகாட்டி மதிப்பீட்டு தொகையினை மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.)

| | |
|---|---|
| உத்தேச மனைப்பிரிவு சாலை | = 772.62 ச.மீ |
| உள்ளாட்சி உபயோகத்திற்கு | = 13.55 ச.மீ (0.63%) |
| தமிழ்நாடு மின்உற்பத்தி (ம) மின்பகிர்மான கழக (TANGEDCO) உபயோகத்திற்கு - | = 12.29 ச.மீ (0.59%) |

**கட்டிட வரம்பு:**

7.20மீ அகலச்சாலைகளுக்கு 1.50மீ விடப்பட வேண்டும்
9.0மீ (மு) 12.0மீ அகலச்சாலைகளுக்கு 3.0மீ விடப்பட வேண்டும்

**மூலை முடக்கு:**

9.0மீ முதல் 12.0மீ அகலச்சாலைகளுக்கு 3.0மீ X 3.0மீ விடப்பட வேண்டும்

**நிபந்தனைகள்:**

1. அரசாணை எண்:18, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள்:04.02.2019-ன் படி, உள்ள நிபந்தனைகளை கடைப்பிடிக்க வேண்டும்.
2. அரசாணை எண்:16, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள்:31.01.2020 -ன் படி , ஒள்ள நிபந்தனைகளை கடைபிடிக்க வேண்டும்.
3. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன், இடத்தில் எந்த துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்க்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்பட வில்லை என்றும், உள்ளாட்சியில் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
4. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என்று அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்ப்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர், அவர்களால் ரத்து செய்யப்படும்.
5. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
6. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில் நுட்ப ஆவணங்களில் (கிரையப் பத்திரம் - குத்தகை பத்திரம் - பட்டா - தானப்பத்திரம்- பொது அதிகார பத்திரம் ஆமலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்னள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் மூலம் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
7. நீர் நிலைகள் பாதிக்கப்படாத வண்ணம் கட்டிடம் கட்டப்பட வேண்டும்.
8. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலையின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6 x 4 - அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரிசுரிக்கப்பட வேண்டும்.
9. நீதிமன்ற வழக்கு ஏதேனும் நிலுவையில் இருப்பின் இத்துறையின் மனைப்பிரிவு அனுமதி செலுத்தக்கது அல்ல.
10. மனைப்பிரிவின் உத்தேச சாலையின் நேர்பார்வைக்கேற்ப குறைந்த அழுத்த மின் கம்பியின் பாதையை மாற்றியமைக்கப் பட வேண்டும்.

**குறிப்பு:** அனைத்து அளவுகளும் மீட்டரில் குறிப்பிடபட்டுள்ளது.

ம.வ/ மா.ந.ஊ.அ.(மதுரை மாவட்டம்) எண்: 19/2025
(இணையதள ஒப்புதல்)

உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
மதுரை மாவட்டம்